DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC.150/2024. |
| Deposition of Witness for | : | P.W.9 |
| Name | : | **சாந்தி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2, 3-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3-ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02.09.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லுவழியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் காயம்பட்ட சாட்சிகள் மற்றும் புகார்தாரர் ஆகியோரை தெரியும். எனக்கு சாட்சிகள் அ.சா.8 இந்துமதி, சாட்சி ஆரோக்கியமேரி ஆகியோரை எனக்கு தெரியும். 26.01.2024ம் தேதி சுதந்திர தினத்தன்று நான் தோட்டத்திற்கு செல்வதற்காக இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சிகளான சின்னப்பன். உபகாரமேரி வீட்டு வழியாக காலை 8.00 மணிக்கு சென்றேன். அப்போது அ.சா.7 சின்னப்பன் என்பவருடைய பேரன் அ.சா.4 ஜோபின்

என்பவர் அவரது வீட்டு வாசல் முன்பு நின்று கொண்டிருந்தார். என்னை அவர் வரும்படி அழைத்தார். நான் அ.சா.4 ஜோபினிடம் ஏன் ரத்தக்காயத்துடன் நின்றுகொண்டிருக்கிறாய் என கேட்டேன்.

2. அதற்கு அவர் யாரோ ஒரு நபர் வீட்டிற்குள் வந்து அனைவரையும் வெட்டிவிட்டதாக சொன்னார். நான் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது அ.சா.5 ஜெர்லின், அ.சா.6 உபகாரமேரி, அ.சா.7 சின்னப்பன், அ.சா.3 வேதபோதக அரசி ஆகியோர் ரத்தக்காயங்களுடன் இருந்தார்கள். நான் வேதபோதக அரசியை கூப்பிட்ட போது அவர் ரத்தக்காயங்களுடன் கிடந்தார். வீட்டை பார்த்தபோது வீட்டிலுள்ள கதவு திறந்துகிடந்தது. பீரோ அனைத்தும் திறந்த நிலையில் கிடந்தது நகை, பணம் ஆகியவை திருடு போயிருந்தது. அதன்பிறகு ஊரில் உள்ள போன் மூலமாக ஆம்புலன்சை வரவழைத்து காயம்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நகைகள் திருடு போயிருந்ததை நான் எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் நான் வீட்டினுள் சென்று பார்த்தபோது வேதபோதக அரசியின் தோடு, தாலி சங்கிலி எல்லாம் அறுந்து கீழே கிடந்தது, உபகாரமேரியின் தாலி செயினும் பாதி அறுந்து கீழே கிடந்தது. கீழே கிடந்த செயின் எவ்வளவு பவுன் இருக்கும் என்றால் எவ்வளவு இருக்கும் என்று எனக்கு தெரியாது. அ.சா.4 ஜோபின் யாரோ வெட்டிவிட்டாக சொன்னாரா என்றால் ஆமாம். எத்தனை பேர் வந்ததாக சொன்னார் என்றால் ஒருவர் வந்ததாக சொன்னார். இந்த விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து சம்பவம் நடந்த

மூன்று நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அ.சா.4 ஜோபினை நான் பார்க்கவில்லை என்றும் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.02 17:18:29 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை..**